# JESUS IN THE QUR-AN AND THE BIBLE.

# குர்ஆனிலும் பைபிலிலுமுள்ள

# இயேசு.

8 - JUL 1930

BY

SEYAD AHMED SAHIB (A. M. S.)

147

FOR

THE AHMADI MUSLIMS LITERATURE SOCIETY,

SATANKULAM

TINNEVELLY Dt.

1930.

# முகவுரை.

கிறிஸ்தவ சகோதரர்களே!

உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக. இப்புத்தகத்தை எழுதி உங்கள் பார்வைக்கு வைப்பதற்கு முக்கிய நோக்கமென்ன வென்பதை சுருக்கமாய் கூறுகிறோம்.

இஸ்லா மார்க்கத்திற்கும் கிறிஸ்துவ மார்க்கத்திற்கும் எவ்வித நெருங்கிய ஐக்கியமிருக்கிறதென்பதைக் காட்டுவதற்காகவும், மேலும் பைபிலுக்கும் குர்ஆனுக்கும் எவ்வித ஒற்றுமை ஏற்பட்டுள்ள தென்பதையும நீங்கள் அறிந்து கொள்வதற்காகவும்; இப்புத்தகத்தை எழுதிவெளிப்படுத்தியிருக்கிறோம். நிற்க, நாம் எவ்விதம் ஒரு தாய் நாட்டிற் பிறந்த சகோதரர்களாயிருக்கிறோமோ? அவ்விதமே விசுவாச முறையிலும் சகோதரர்களா யிருக்கிறோமென்பதை யுணர்ந்துக் கொள்வீர்களாக.

ஏனெனில் ஆப்ரஹாமுடைய புத்திரர் ஈசாக்கு (இஸ்ஹாக்) உடைய வம்சத்திலிருந்து வந்தவர்தான் இயேசு (அலை) வாகும். இவ்வாறே, ஆப்ரஹாமுடைய மறு புத்திரர் இஸ்மவேல் (இஸ்மாயீல் அலை)வம்சத்திலிருந்து வந்தவர்தான், எங்கள் முஹம்மது நபி (ஸல்) அவர்களாகும். எனவே, இயேசுவுக்குப் பின் முஹம்மது நபி (ஸல்) அவர்களை இறைவன் அனுப்பவேண்டிய காரணமென்ன வென்பதையும் அவர்கள் வந்து என்ன செய்தார்கள் என்பதையும் சுருக்கமாய் இப்புத்தகத்தில் எழுதப்பட்டிருப்பதால் இதை பார்வையிடும்படி உங்களை வேண்டிக்கொள்ளப்படுகிறது.

சாத்தன்குளம்
மே. 1930

ஸெய்யத் அஹ்மது ஸாஹிப்

# JESUS IN THE QUR-AN AND THE BIBLE.

# குர் ஆனிலும் பைபிலிலுமுள்ள இயேசு.

## இஸ்ரவேலின் பிள்ளைகள்.

இஸ்ரவேல் கூட்டத்தார் அடிக்கடி பாவஞ்செய்கிறவர்களாயும், இறைவனிடமிருந்து வரும் தீர்க்கதரிசிகளைக் கொலை செய்கிறவர்களாயும் வணங்காக் கழுத்துடையவர்களாயும் சிருஷ்டிப்பொருள்களைத் தெய்வமாக நினைத்துப் பூஜிப்பவர்களாயுமிருந்தார்கள். இதனுல் இறைவன் அடிக்கடி இவர்களுக்குத் தீர்க்கதரிசிகளை யனுப்பி எச்சரித்து வந்தான். இவ்விதம் வந்த தீர்க்கதரிசிகளில் மோசே தீர்க்கதரிசியே மிகு மேன்மையுள்ளவராயும் இறைவனுடைய கருணையையும் மிகுந்த ஆசீர்வாதத்தையும் பெற்றவராயுமிருந்தார். எனவே, காருண்ய மூர்த்தியாகிய இறைவன், மோசே (மூசாநபி) க்கு ஓர் நியாயப் பிரமாணத்தைக் கொடுத்து, இஸ்ரவேலின் பிள்ளைகளை அப்பிரமாணத்தைப் பின் பற்றும்படி ஏவினுன். சுருக்கிச் சொல்லின் மோசேயையும், அவருக்கு அருளப்பட்ட பிரமாணத்தையும் பின் பற்றி நூற்றுக்கணக்கான தீர்க்கதரிசிகளை இஸ்ரவேலரிலிருந்து எழுப்பப்பட்டு வந்தன. இப்பரிசுத்தவான்கள் தோன்றி அவர்களுக்குப் பாவத்தைக்குறித்தும், நீதியைக் குறித்தும் கண்டித்து வந்தனர். ஆயினுமென்ன, அந்த வணங்காக்கழுத்துடைய இஸ்ரவேல்மக்கள் மோசேயுடைய நியாயப் பிரமாணத்தை மீறி, இறைவனுடைய பார்வைக்

குப் பொல்லாப்பைச் செய்துகொண்டே வந்தார்கள். இவ்வுண்மையை பைபிலிலும் குர்ஆனிலும் காணலாம். இவர்களுடைய இத்துர்க்கிருத்தியங்களைப்பற்றி இறைவன் குர்ஆனில் அருளுவதாவது:—

"நாம் மெய்யாகவே மோசேயுக்கு (மூசாநபி) நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தோம், இன்னும் அவரைப் பின்பற்றி தீர்க்கதரிசிகளையு மனுப்பினோம்; அவ்விதம் தீர்க்கதரிசிகள் வரும்போதெல்லாம், நீங்கள் (யூதர்கள்) அவர்களை விரும்பாமல் பெருமையடித்து உங்களில் ஒரு கூட்டம் அவர்களைப் பொய்யாக்கவும், மற்றொரு கூட்டம் அவர்களைக் கொல்லவும் செய்தீர்கள். ஆகவே, நிராகரித்ததின் காரணமாக இறைவனுடைய சாபம் அவர்கள் மீது விழுந்தது" (சூரு. பகரு. ஆயத் 87.)

## இயேசுவின் வரலாறு.

இறைவன், கருணையும் இரக்கமுமுள்ள தேவனானபடியால், இஸ்ரவேலின் புத்திரர்கள் செய்யும் பாவத்திற்காக அதிகம் தண்டித்து விடாமல், திரும்பவும் அவர்கள் பேரில் இரங்கி, இறுதியாக ஓர் தீர்க்கதரிசியை அவர்களுக்கு அனுப்பி, இரக்ஷிப்பதாக வார்த்தைப்பாடு செய்திருந்தான். இதனால் அந்த யூதர்கள் தங்களை ரக்ஷித்துக் காப்பதற்காக, ஓர் மேசியா (மஸீஹ்) வருவார் யென்றும் எதிர் பார்த்தவண்ணமாயிருந்தனர். எனவே, இறைவன் தன் வார்த்தைப் பாட்டைப் பூர்த்தி செய்வதற்காகவும் அந்த இஸ்ரவேலின் புத்திரர்களை சபித்துவிடும் ஓர் அறிகுறியாகவும் ஒரு கன்னிகையைத் தெரிந்தெடுத்து அவருடைய கெர்ப்பத்திலிருந்தே வரவேண்டிய அந்த மேசியாவை அவதரிக்

கச் செய்தான். ஏனெனில் அந்த யூதர்கள் முற்றுமேகெட்டு இறைவனுடைய பார்வைக்குப் பொல்லாப்பைச் செய்து வந்தபடியால் அக்கெட்டவர்களுடைய வித்திலிருந்து அம் மேசியாவை எழுப்பாமல் ஓர் நல்ல பெண்ணிலிருந்தே அவரை எழுப்பப்பட்டது. மேலும் ஒரு தீர்க்கத்தரிசி யுடைய பிதாவென்று சொல்லக்கூடிய ஒரு நல்ல மனிதனும் அக்காலத்திலில்லை. ஆதலின் இறைவன் அந்த இஸ்ர வேல் சந்ததியாருக்குக் கொடுக்கப்பட்ட அனுக்கிரகங் களைப் பிடுங்கி, நல்லகனி கொடுக்கக் கூடிய ஓர் கூட்டத் திற்கு அவைகளைக் கொடுக்க நாடியிருந்தபடியால் மரியா ளின் வயிற்றிலுதித்த அந்த மேசியாவிலிருந்து ஆப்ரகா முடைய குமாரர் (இஸ்ஹாக்) ஈசாக்குடைய பரம்பரைத் துடரை வெட்டுப்பட்டு, இஸ்ரவேல் சந்ததிகளிலிருந்து வந்துகொண்டிருந்த தீர்க்கத்தரிசிகள் வருகையின் வாசலை யும் இறைவனால் மூடிவிடப்பட்டது. இதனால் மரியாளின் புத்திரர் இயேசுவுக்குப் பிறகு வேறொரு தீர்க்கத்தரிசியா வது இஸ்ரவேலரிலிருந்து உற்பத்தியாகவே இல்லை. இதைப் பற்றி இறைவன் குர்ஆனில் அருளுகிறதாவது, "ஓ இஸ்ர வேலின் பிள்ளைகளே! (உங்களுக்கு ஈயப்பட்ட) என்னுடைய அனுக்கிரகங்களை நினைத்துப் பாருங்கள்; நாம் உலகத்தின் மீது மேன்மையை தந்தோம். (சூரு பகரு. 122) மேலும் "எப்போது நம்முடைய கற்பனைகளை அவர்கள் (யூதர்கள்) மறந்து பாவத்தைச் செய்தார்களோ, அப்போது நாம் அவர்களைப் பெரிய ஆக்கினையைக்கொண்டு பிடித்தோம்; இன்னும் அவர்களுடைய வம்புத்தனத்திற்காக (இயேசுவை மறுத்ததற்காக) அவர்களை வெட்கங்கெட்ட குரங்குகளா குங்கள் என்று சொன்னோம்." (சூரு.இஹ்ருப் 165, 167)

## இயேசு மோசேயைப் பின்பற்றி வந்தவராவர்.

நாம் முன் கூறியுள்ளதுபோல் மோசேயையும் அவருக்குக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தையும் பின்பற்றிவந்த நூற்றுக்கணக்கான தீர்க்கதரிசிகளில் நம் மரியாளின் குமாரர் இயேசுவும் ஒருவராவர். இவரைத்தான் இஸ்ரவேலர்களுக்கு வார்த்தைப்பாடு செய்த மெசியாவாக இறைவனால் அனுப்பப்பட்டது. இவர் வந்து இஸ்ரவேலருக்கு என்ன உபதேசித்தார்; பரலோக ராஜ்ஜியம் வந்துவிட்டது, அதிற் பிரவேசியுங்கள் என்றும் தன்னை விசுவாசிப்பவன் அதில் பிரவேசிப்பானென்றும் பிரசங்கித்து வந்தார். மேலும் இயேசு யூதர்களுக்குச் சொன்ன உறுதிமொழியாவது:—"நியாயப்பிரமாணத்தையாகிலும், தீர்க்கதரிசனங்களையாகிலும், அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள். அழிக்கிறதற்கு அல்ல நிறைவேற்றுவதற்கே வந்தேன். ஆகையால் இந்தக கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி அவ்விதமாய் மனுஷருக்குப்போதிக்கிறவன் பரலோக ராஜ்ஜியத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான். இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோக ராஜ்யத்தில் பெரியவன் எனப்படுவான்" என்றார்.

(மத்தேயு 5. 17-19.)

இவ்விதமே இயேசு தன் வார்த்தையின்படி மோசேயுடைய பிரமாணத்தைப் பின்பற்றி நடந்துங் காட்டினார். இதை உண்மைப்படுத்தி பரிசுத்த குர்ஆனில் இறைவன் அருளுவதாவது "மரியாளின் மகன் இயேசு சொன்னதை நினையுங்கள்! ஓ இஸ்ரவேல் சந்ததிகளே! திடனாக யான் உங்களுக்கு தீர்க்கதரிசியாயிருக்கிறேன். இன்னும் என்

கரத்திலிருக்கும் (தௌராத்தை) மோசேயுடைய நியாயப் பிரமாணத்தை மெய்ப்படுத்துகிறவனுயுமிருக்கிறேன்.''
(சூராசப் ஆயத் 6, 7.)

## இயேசு ஒரு தீர்க்கத்தரிசியே யாவர்.

இஸ்ரவேல் சந்ததியார் தங்களை ரட்சிப்பதற்காக ஓர் தீர்க்கதரிசியாகிய மேசியா வருவார் என்று எதிர்பார்த்திருந்தார்களேயல்லாது, ஒரு கடவுளையல்ல. அவ்வாறே யூதர்களிற் சிலர், அவரைத் தீர்க்கதரிசியென்றும் மேசியாயென்றும் விசுவாசித்திருந்தனர். அவர் தானும், தம்மை ஓர் தீர்க்கதரிசி என்றும் மேசியாவென்றும் ஏற்றுக்கொள்ளும்படியே உபதேசித்து நின்றூர். ஆனல் யூதர்கள் அவரை அவ்விதம் விசுவாசிக்காமல் ''இவன் தச்சனுடைய குமாரன் அல்லவா? இவன் தாய் மரியாள் என்பவள் அல்லவா? யாக்கோப், யோசே, சீமோன், யூதா என்பவர்கள் (மரியாள் விவாகம் செய்து பெற்ற) இவனுக்குச் சகோதரர்களல்லவா? இவனுடைய சகோதரிகள் (மரியாள் பெற்ற பெண்கள்) எல்லோரும் நம்மிடத்திலிருக்கிறூர்களல்லவா? இப்படியிருக்க இதெல்லாம் இவனுக்கு எப்படி வந்தது'' என்று சொல்லி, அவரைக் குறித்து இடறலடைந்தார்கள். இதற்குப் பிரதியுத்தரமாக இயேசு அவர்களை நோக்கி, ''தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் வீட்டிலுமே யன்றி வேறெங்கும் கனவீனமடையான் என்றூர்.'' (மத்தேயு 13–55, 56–57) ''அந்த ஸ்திரீ அவரை நோக்கி கிறிஸ்து எனப்படுகிற மேசியாவருகிறூர் என்று அறிவேன். அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார்'' என்றூள். அதற்கு ''இயேசு, உன்னுடனே பேசுகிற நானே அவர் என்றூர்'' (யோவான் 4: 25–26.) ''நசரேயனுகிய

இயேசு தீர்க்கதரிசியாக இருந்தார்." (லூக்கா 24. 19.) இதை மெய்ப்படுத்தி பரிசுத்த குர்ஆனில் இறைவன் அருள்கிறதாவது "இயேசுவை இஸ்ரவேலின் பிள்ளைகளுக்கு தீர்க்கதரிசியாக அனுப்பினேம்." (சூறு ஆல இம்றுன்).

## இயேசு இஸ்ரவேல் ஜாதியாருக்கு மாத்திரம் வந்தவரேயல்லாது எல்லோருக்குமல்ல.

இயேசு வந்தபோது இஸ்ரவேல் கோத்திரத்தார் பன்னிரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுக்கிடந்தனர். இதில் இரண்டு பிரிவார் மாத்திரம் பலஸ்தீன்நாட்டில் வசித்து வந்தனர். மற்ற பத்து கூட்டத்தாரும் வேறு யிடங்களிலிருந்து வந்தார்கள். இதனுல், அந்தக் காணுமற்போன ஆட்டுக்குட்டிகளாகிய இஸ்ரவேல்ஜனங்களைக்கண்டுபிடித்து ரட்சிக்கும் பொறுப்பு இயேசுவின்பேரில் சுமந்திருந்தது. ஆகவே இயேசு இரவுபகலாய் அந்த இஸ்ரவேல் ஜனங்களை ரட்சிப்பதற்காகவே பாடுபட்டுவந்தார் அன்றியும் இயேசுவுக்கு இறைவனுல் சாட்டப்பட்ட வேலையு மிதுவேயாகும். அவருடைய ஜீவியகாலத்தில் ஒரு அன்னிய ஜாதியாளான ஓர் கானுனிய ஸ்திரீ ஒருத்தி, அவரிடத்தில் வந்து தன்னை ரக்ஷிக்கும்படி கேட்டதற்கு இயேசு என்ன சொன்னுர்? "காணுமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்ல" என்ருர். (மத்தேயு 15-24) திரும்பவும் அவள் வந்து வேண்டிக்கொண்டதற்கு, அவர் அவளைப்பார்த்து, "பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்ருர்" (மத்தேயு 15-26) இயேசு இஸ்ரவேலருக்கு மாத்திரம் வந்தவர் என்பதற்கு இதுவே போது

மானதாகும். இன்னும் பன்னிரு சீஷர்களையும் இயேசு திடப்படுத்தி, பிரசங்கிகளாய் அனுப்பும்போது என்ன கட்டளையிட்டார்? "நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும் சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும் காணமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கே போங்கள்" (மத்தேயு 10. 5-6) இதை உண்மைப்படுத்தி குர்ஆனில் இறைவன் அருள்கிறதாவது, "இயேசு இஸ்ரவேலர்களுக்கு ஓர் நபியாயிருந்தார்" (சூரு ஆலம் இம்ருன் ஆயத் 49.)

## இயேசுவின் முன் அறிவிப்பும், இஸ்ரவேலரின் வீழ்ச்சியும்.

நாம் முன் கூறியுள்ளது போல் இரக்கமுள்ள தேவன் தன் வார்த்தைப் பாட்டின்படி இஸ்ரவேலர்களுக்கு இயேசுவை மேசியாவாக அனுப்பி வைத்தான். ஆனால், அந்தத் துர்பாக்கியமுள்ள யூதர்கள், தங்கள் பிதாக்கள் மற்றும் தீர்க்கத்தரிசிகளுக்குச் செய்தது போலவே, இவரையும் மறுதலித்துக் கொல்லுதற்கு வகை தேடினார்கள். இதனால் இறைவனுடைய சாபம் அவர்கள் பேரில் விழுந்தது. இயேசுவும் இவர்களைச் சபித்தார். மேலும் அவர் கூறினதாவது "ஆகையால் தேவனுடைய ராஜ்யம் உங்களுக்கிடையிலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்." (மத்தேயு 2!-43)

இதை உண்மைப்படுத்திப் பரிசுத்த குர்ஆனில் இறைவன் அருள்கிறதாவது:—"இஸ்ரவேல் மக்களிலுள்ள அவிசுவாசத்தால் அவர்கள் தாவீதின் நாவைக்கொண்டும் மரியாளின் மகன் இயேசுவின் நாவைக்கொண்டும் சபிக்கப்பட்டார்

கள் அவர்கள் அவிசுவாசங் கொண்டதினுலும் அளவைமீறியதினுலுமே இவ்வாறு நடந்தது." (சூருமாயிதா ஆயத் 79)

## கிறிஸ்தவர்கள் செய்த பொல்லாப்பாவம்.

மத ஆராய்ச்சி செய்யும் மனிதர்களே! நாம் இதற்குமுன் யூதர்கள் செய்த பொல்லாப்பைப் பற்றிய சிலதை விவரித்துக் காட்டினேம். தற்போது கிறிஸ்தவர்களால் எவ்விதப் பொல்லாப்பை இவ்வுலகில் செய்யப்பட்டிருக்கிறதென்பதைக் கவனிப்போமாக. இயேசுவை யூதர்கள் மறுதலித்து விட்டபின் அவரைப் பின் பற்றி வந்த கிறிஸ்தவர்கள் படிப்படியாய் இயேசுவின் உண்மைப்போதனையை விட்டும் நீங்கிப் பெரும்பாவங்களைச் செய்கிறவர்களாகி விட்டார்கள். இயேசு மோசேயுடைய நியாயப் பிரமாணத்தைப் பின் பற்றியே நடந்துவந்தார். மேலும் தன் சீஷர்களுக்கும் அப்பிரமாணத்தைக் கைக்கொண்டு நடந்தாலல்லாது, ரட்சிப்புக்கிட்டாதென்றும் அதன் கற்பனைகளை நிறைவேற்றிக் காட்டவே தான் வந்திருப்பதாயும் எச்சரித்துள்ளார். இவ்வாறே, இயேசு தம்மரண பரியந்தம், மோசேயைப் பின்பற்றிக்கற்பனைகளைக் கைக்கொண்டு, ஒரே தேவனையே வணங்கி அத்தேவனின் நாமத்தையே சொல்லி ஸ்தோத்திரம் செய்து வந்தார். மேலும் அவர் உரைத்ததாவது, "நீ என்னை நல்லவனென்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிற நல்லவன் ஒருவனுமில்லையே? நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினுல் கற்பனைகளைக் (பிரமாணத்தை) கைக்கொள் என்ருர்." (மத்தேயு 19-17) இன்னும் அவர் உரைத்ததாவது, "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்

பானேயல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில பிரவேசிப்பதில்லை என்றார்.” (மத்தேயு 7–21)

இன்னும் பிற்காலத்தில் இஸ்ரவேலரல்லாத அன்னிய ஜாதியினர், அவர் ஏவாததும் செய்யாததுமான பெரும் பாவங்களைச் செய்து இயேசுவைக் கொண்டு ரட்சிப்படைந்தோம் என்றுரைப்பார்களென அறிந்து அவர் சொன்னதாவது, “அந்நாளில் அனேகர் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோமல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளை துரத்தினோமல்லவா? உமது நாமத்தினாலே அனேக அற்புதங்களைச் செய்தோமல்லவா? என்பார்கள். அப்போது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன் என்றார்” (மத்தேயு 8–22) ஆயினுமென்ன? கிறிஸ்தவர்கள் இயேசுவுடைய இப்போதனைகளுக்கும் அவரது செய்கைகளுக்கும் மாறாக ஓர் நூதன ரட்சிப்பை சிருஷ்டித்து வல்லமையுள்ள தேவனுடைய பார்வைக்கு மிகப் பொல்லாப்பைச் செய்து பெரும்பாவிகளாகச் சமைந்தனர். பிற்காலத்தில் கிறிஸ்தவர்களால் செய்யப்பட் இப்பாவமோ. யூதர்கள் செய்த பாவங்களைப் பார்க்கிலும் மிகப்பெரிதாய் விட்டது.

## இயேசுவுக்குப்பின் சிருஷ்டிக்கப்பட்ட நூதன ரட்சிப்பு.

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய இம்மூன்றும் ஒரே இறைவனே. ஆகவே இயேசுநாதர் உலகின் பாவத்

திற்காகப் பிறந்து, சிலுவை மரணத்தை தெரிந்துகொண்டார். அவருடைய மரணத்தினால் மற்றவர்களை மீழ்விக்கப்படுகிறது. பாவிகளைக் காப்பதற்காக சர்வவல்ல தேவன் தமது மாசற்ற குமாரனைக் கொன்றார் என்பதாம்.

ஓ சகோதர நண்பர்களே! கிறிஸ்தவர்களுடைய இவ் விரட்சிப்பை சற்றுக் கவனிப்பீர்களாக. இக்கோதா உலகில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் நியாயத்திற்கும் மனுஷீகப் பகுத்தறிவிற்கும் தெய்வீக நீதிக்கும் கருணைக்கும் மாறான ஓர் நூதன ரட்சிப்பாயும், இறைவன் இவ்வுலகில் தீர்க்கதரிசிகளைக்கொண்டு நிறுவப்பட்டுவந்த நியாயப்பிரமாணத்திற்கும், இயற்கை சட்டத்திற்கும் மாறான ஓர் நூதன சித்தாந்தமாயுமிருக்கிறது. மத ஆராய்ச்சி செய்யும ஒவ்வொரு பகுத்தறிவுடைய மனிதனும் சற்று நேரத்திற்குத் தானும் இவ்வித ஓர் இரட்சிப்பை ஏற்றுக் கொள்ளமாட்டான். அறிவுடைய காலத்தில் ஜீவித்திருக்கும் ஓ மனிதர்களே! ஓர் மனிதனுடைய மரணத்தினால் மற்றவர்களின் இருதயங்களிலுள்ள பாவத்தின் அசுத்த குணத்தை எப்படி நீக்கக் கூடும்? குற்றமற்ற மனிதனின் கொலையைக்கொண்டு மற்றவர்கள் செய்கிற பாவங்களையும் குற்றங்களையும் பொறுத்துவிடுவது எங்ஙனம்? குற்றவாளிக்குப் பதிலாக ஓர் குற்றமற்ற ஓர் தீர்க்கதரிசியைப் பிடித்துத் தண்டிப்பது நீதிக்கு மாற்றமல்லவா? குமாரனில் குற்றமில்லாதிருக்க அவரை சத்துருக்களுக்கு ஒப்புக்கொடுத்துக் குரூரமாய்க் கொலை செய்வது எப்படி நீதியாகும்? பாவிகளை இரட்சிப்பதற்காக ஒருவர் சிலுவையில் அறைபட்டுத்தொங்கித் தன் உயிரை மாய்த்துக்கொள்வது தற்கொலையல்லவா? 'எனவே இறைவன்பேரில் ஆணையாக, இயேசுவுடைய விருப்பத்திற்கு மாறாகவே யூதர்கள் இழுத்துக்கொண்டுபோய் அவரை பல

வந்தமாய் சிலுவையில் அறைந்தார்களேயல்லாது, மனிதர்களை ரட்சிப்பதற்காகவல்ல. அந்நேரத்தில் இயேசு சப்தமிட்டார், கடவுளை நோக்கிக் கூப்பிட்டார். எனவே, இயேசு ஒரு தடவையல்ல; பத்துத் தடவைகளாக சிலுவையிலறையப்பட்டுத் தொங்கினாலும் மற்றவர்கள் பாவம் நீங்குவதுமில்லை மனிதர்கள் ரட்சிப்புப் பெறப்போவதுமில்லை. என்ன? யோவானுடைய தலைவலி நீங்குவதற்காக குற்றமற்ற ஒரு பீட்டருடைய தலையை நொறுக்குவது ஒரு புதுமையல்லவா? நீதிக்கு விரோதமாக ஒருவன் பாவஞ் செய்துகொண்டிருக்கையில் கர்த்தருடைய குமாரனாகிய இயேசுநாதர் இப்பாவத்திற்காக சிலுவையிலறைபட்டு தன் உயிரை மாய்த்துக்கொண்டார் என்று நினைத்த மாத்திரத்தில் தன் பாவம் அகன்றுவிடும் என்று சொல்வது ஓர் நூதன தத்துவஞானமாயிருக்கிறது! எனவே இவ்விதம் சொல்லும் இப்பொல்லாப்பைக் குறித்து வல்லமையுள்ள தேவன் பரிசுத்த குர்ஆனில் அருள்வதாவது, ("ஓ முஹம்மது நபியே) ஆண்டவனுக்கு குமாரன் உண்டுமென்று சொல்லுகிற அந்தக் கிறிஸ்தவர்களை எச்சரிப்பீராக. அவர்களுக்கும் அவர்களிலுள்ள பெரியோர்களுக்கும் அதைப்பற்றிய அறிவு கொஞ்சமுமில்லை. அவர்கள் வாயிலிருந்து புறப்படுகிற பேச்சானது பெரியதாயிருக்கிறது. அவர்கள் பொய்யையே சொல்லுகிறார்கள்" (சூரா. கஹ்பு ஆயத் 35.) இன்னும் இறைவன் அருள்வதாவது, "வானம் வெடிக்கப்போகிறது, பூமி பிளக்கப்போகிறது, மலைகள்துண்டு துண்டாய் விழப்போகிறது, அவர்களோ (கிறிஸ்தவர்களோ) கருணையுள்ள ஆண்டவனுக்கு குமாரன் உண்டுமென்று சொல்கிறார்கள்." (சூராமரியம் 92-94) இன்னும். "சொல்லும் இறைவன் ஒருவன் அவன் தேவையற்றவன்; அவன் ஒருவரைப் பெறவும் ஒருவரும் அவனைப்

பெறவுமில்லை; அவனுக்கு நிகரானது ஒன்றுமில்லை'' (சூரு இக்லாஸ்) இன்னும் இறைவன் அருள்வதாவது, ''ஏ மரியாளின் மகன் இயேசுவே! (ஈசாவே) இறைவனைத் தவிர என்னையும் என் தாயாரையும் இரு கடவுள்களாகப் பிடியுங்கள் யென்று அவர்களுக்குச் சொன்னீரா? என்று கேட்கும் போது அவர் சொல்லுவார், (ஓ என் இரக்ஷகா!) நீயே பரிசுத்தம் வாய்ந்தவன்; எனக்கு உரித்தில்லாததைச் சொல்ல, என்ன தத்துவமிருக்கிறது? நான் அவ்விதம் சொல்லியிருப்பேனாயின், நீ அறிந்திருப்பாய்; எனதுள்ளத்திலிருப்பதை நீ அறிவாய்; உனதுள்ளத்திலிருப்பதை நான் அறியேன்; நீயோ இரகசியங்களை அறிவாய்; நான் அவர்களுக்கு(கிறிஸ்தவர்களுக்குச்) சொன்னதெல்லாம் உன்னுடைய கட்டளைப்படி. உங்களையும் என்னையும் சிருஷ்டித்த இறைவனையே வணங்கும்படி சொன்னேன். நான் உலகில் அவர்களுக்கிடையில் ஜீவித்திருக்கும்போது இதற்கு நான் சாக்ஷியாயிருந்திருக்கிறேன். நீ என்னை மரணமடையச் செய்தபின் அவர்களின் கிரியைகளுக்கு நீ சாக்ஷியாயிருக்கிறாய் இன்னும் நீயோ எல்லா வஸ்துக்களின் பேரிலும் சாக்ஷியாளனாயிருக்கிறாய்'' என்பார் (சூருமாயிதா ஆயத் 116-118) இறைவனுடைய இவ்வசனங்களெல்லாம் இயேசுவுடைய மரணத்திற்குப் பிற்பாடே, கிறிஸ்தவர்கள் வழிகெட்டுப் போய் இயேசுவை கடவுள் என்றும், கடவுளின் குமாரன் என்றும் சொல்லி இறைவன் பார்வைக்குப் பொல்லாப்பைச் செய்யத் துவங்கினார்கள் என்பதற்கு குர்ஆனும் பைபிலுமே போதிய சாட்சியங்களா யிருக்கின்றன. இவ்விதம் இவர்கள் பாவத்தில் மூழ்கியிருக்கும் தருணத்தில்தான், இறைவன் உலக இரட்சகர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களை பாரான் மலையிலிருந்து எழுப்பினான்.

## உலக இரக்ஷகர் முஹம்மத்நபி (ஸல்) யின் வருகை.

மத ஆராய்ச்சி செய்யும் கல்வியுடையவர்களே? சற்று கவனிப்பீர்களாக. இதற்கு முன் நாம் இஸ்ரவேலர்கள் (யூதர்கள்) செய்து வந்த பாவத்தையும், கிறிஸ்தவர்கள் இயேசுவுடைய மரணத்திற்குப்பின் செய்துகொண்ட பாவத்தையும், விவரித்துக் காட்டினேம். இந்த இரு கூட்டங்கள் செய்துவந்த பொல்லாப்போ 'தறபோதும் சூரியப்பிரகாசம் போல் ஜொலித்துக் கொண்டிருப்பதை அறிவுடைய மக்கள் அறிந்திருக்கிறார்கள். எனவே, இனி இறைவன் என்ன செய்யவேண்டும்? ஆதாமின் பிள்ளைகள் சன்மார்க்கத்தை விட்டும் நீங்கி சிருஷ்டிப்பொருள்களையும், தீர்க்கதரிசிகளையும், இறைவனைப் பிடித்து பூஜித்து வருவதைப்பார்த்து அக்காருண்ய பகவானை இறைவன் மௌனம் சாதித்துக்கொண்டிருக்க வேண்டுமா? அல்லது வேறொரு தத்துவமுள்ள தீர்க்கதரிசியை எழுப்பி, இப்பாவிகளை எச்சரித்து, ஏக பராபரக்கடவுளை வணங்கவும் அக்கடவுளிடமே ரட்சிப்புத்தேடி சன்மார்க்க வழியில் செல்லவும் தூண்டுதல் செய்ய வேண்டுமா? எனவே, இறைவன் முழு உலகிற்கும் இரட்சகராக ஒரு வல்லமையுள்ள தீர்க்கதரிசியைத் தெரிந்தெடுத்து தன்மேன்மையையும் வல்லமையையும் மனிதர்களுடைய இருதயத்தில் பதியச்செய்வதற்காக, அவரை நல்ல தருணத்தில் அனுப்பி வைத்தான். அவர்தான் அரபியாவில் அவதரித்த முஹம்மது நபி (ஸல்) யாகும்.

## மோசேயின் தீர்க்கத்தரிசனமும் முஹம்மதுநபியும்.

இம்மகிமை வாய்ந்தவரைப்பற்றி இறைவன் மோசேயுக்கு அறிவித்ததாவது "உன்னைப்போல் ஓர் தீர்க்கதரிசி

யை நான் அவர்களுக்காக, அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்; நான் அவருக்கு கற்பிப்பதை யெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார்" (உபாகமம் 18-18) இன்னும் "கர்த்தர் சீனுயிலிருந்து எழுந்தருளி, சேயீரிலிருந்து அவர்களுக்கு உதயமானுர், பாரான் மலையிலிருந்து பிரகாசித்து, பதினுயிரங்களான பரிசுத்தவான்களோடே பிரசன்னமானுர். அவர்களுக்காக அக்கினி மயமான பிரமாணம் அவருடைய வலது கரத்திலிருந்து புறப்பட்டது." (உபாகமம் 33-33) இந்த எல்லாத் தீர்க்கத்தரிசனமும், முஹம்மதுநபி (ஸல்) அவர்களிலே பூர்த்தியாகிவிட்டன. இறைவனும் பரிசுத்த குர்ஆனில் "நீர் (மூசா) மோசேயைப் போல் இருக்கிறீர்" என்றும் கூறியிருக்கிறுன். (சூரு முஸம்மில் ஆயத் 16.) ஆனுல் இயேசுவைப் பின் பற்றியவர்கள் இதை இயேசுவுக்குச்சாட்டுகிறுர்கள். இது தவறு. ஏனெனில் (1) உன்னைப் போல் ஒரு தீர்க்கத்தரிசி யென்றது, இயேசுவோ மோசேயைப் பின்பற்றி வந்தவர்களில் ஒருவரல்லாது மோசேயைப் போலல்ல. (2) அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவேன் என்றதும், இயேசுவைக்குறிக்கவில்லை. ஏனெனில் இயேசு ஆப்ரஹாமுடைய புத்திரர் (இஸ்ஹாக்) ஈசாக்குடைய சந்ததியிலுள்ளவர். ஈசாக் உடைய சந்ததிகள் தான் இஸ்ரவேலர்களாக வந்தார்கள். இங்கு அவர்கள் சகோதரரிலிருந்து என்றதின் சரியான விழுப்பம் ஈசாக் உடைய சகோதரர் (இஸ்மாயீல்) இஸ்மவேலிலிருந்து என்பதாம். இவ்விதமே மோசையைப் போலுள்ள பெரிய தீர்க்கத்தரிசி ஈசாக்குடைய சகோதரர் இஸ்மவேல் வம்சத்திலிருந்து எங்கள் இரக்ஷகர் முஹம்மதுநபி (ஸலீ) அவதரித்தார். (3) பாரான்மலையிலிருந்து பிரகாசித்து என்றதும் இயேசு அல்ல. ஏனெனில் இயேசு பலஸ்தீன் நாட்டில்

பிறந்தவராகும். பாரான் மலையென்றது அறபியாதேசத்திலிருக்கிறதென்பதை உலகம் அறிந்திருக்கிறது. எனவே இந்த அரபியாவிலிருந்து கிளம்பினவர் முஹம்மது நபியே அல்லாது இயேசுவல்ல. (4) பதினாயிரங்களான பரிசுத்தவான்களுடன் உதயமானார் என்றதும், முஹம்மத் நபியேயாகும். ஏனெனில் பைபிலின்படி இயேசு தன் ஜீவியகால முழுதும் உபதேசித்து பன்னிரு சீஷர்களையே பெற்றிருந்தார். இவர்களுள் ஒருவர் கொஞ்சம் வெள்ளிக்காசுக்கு ஆசை வைத்து இயேசுவை அவருடைய சத்துருக்களுக்குக் காட்டிக்கொடுத்தார். இன்னுமொருவர் இயேசுவின் முன்புக்கே மூன்று தடவை அவரை மறுதலித்தார். மீதமுள்ள பத்துப்பேர்களும் இயேசுவை யூதர்கள் பிடித்தவுடனே ஓடிவிட்டார்கள். ஆகவே, முஹம்மது நபி(ஸல்)யே பதினாயிரக்கணக்கான பரிசுத்தவான்களாகிய தன் சீஷர்களோடே ஜெயபேரிகையுடன் மக்கத்தில் புகுந்தார். (5) அக்கினி மயமான பிரமாணம் அவரது வலது கரத்திலிருந்துபுறப்பட்டது என்றதும், இயேசுக்குவுடையதல்ல. ஏனெனில் இயேசுவோ மோசேயையும், அவருக்கு அருளப்பட்ட பிரமாணத்தையும் பின்பற்றிவந்தவராவர். இன்னும் இயேசு மோசேயுடைய கடைசி சீஷராயுமிருந்தார். எனவே, அக்கினி மயமான பிரமாணத்தைக் கொண்டு வந்தவர் முஹம்மது நபியே யல்லாது இயேசுவல்ல. அந்தப்பிரமாணம் தான் பரிசுத்த குர்ஆனாயிருக்கிறது. எனவே, மோசேயுடைய எல்லாத் தீர்க்கதரிசனமும் பாரான்மலையிலிருந்து வெளியான முஹம்மத் நபி (ஸல்) அவர்களிலே நிறப்பமாகிவிட்டது.

## இயேசுவின் தீர்க்கத்தரிசனமும் முஹம்மதுநபியும்.

நாம் மேலே மோசேயுடைய தீர்க்கத்தரிசனங்களைப் பற்றிப் பேசினோம். இதன்பின் இயேசுடைய தீர்க்கத்தரிசனங்களைப்பற்றிப் பேசுவோம். "இன்னும் அனேக காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதா யிருக்கிறது. அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்" (யோவான் 16. 12.) இன்னும் இயேசு கூறுகிறார் "நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன். நான் போகிறது உங்களுக்குப்பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால் தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார். நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்தில் அனுப்புவேன். அவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்." (யோவான் 16: 7-8.) "அந்தத் தேற்றரவாளன் வரும்போது என்னைக் குறித்து சாட்சி கொடுப்பார்" (யோவான் 15-26) "அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்" (யோவான் 16-14) கிறிஸ்தவ சகோதரர்களே! இயேசு உடைய இத்தீர்க்கத்தரிசனப்படி அவதரித்தவர் முஹம்மது நபியே யல்லாது வேறு யார்? ஆனால் நீங்களோ இத்தீர்க்கத்தரிசனத்தைப் பலவிதமாக வியாக்கியானஞ்செய்து பவுலுக்குச் சாட்டுகிறீர்கள். மத ஆராய்ச்சிசெய்யும் ஒரு மனிதன் இயேசு உடைய இத்தீர்க்கத்தரிசனங்கள் பவுலுக்குடையதல்ல வென்றும் அப்பவுலுக்கு இத்தீர்கத்தரிசனங்களின் இலக்ஷணம் கொஞ்சமும் அமைந்திருக்கவில்லை என்றும் உணர்ந்துகொள்வர். ஏனெனின் பவுலோ இயேசு உடைய ஜீவியகாலத்தில் இயேசுவை

விசுவாசிக்காமல் அவருக்குப் பெரும் சத்துருவாயிருந்தார். அதன்பின் இயேசுவுடைய காலத்திற்குப் பிற்பாடு ஒரு காட்சி கண்டதாக மனிதர்களுக்குச் சொல்லிக்கொண்டு இயேசுவை நம்பினார். அதன்பிறகு பவுல் என்னசெய்தார்? இயேசுவை தேவனால், என்ன நோக்கத்திற்காக இஸ்ரவேலர்களுக்கு அனுப்பப்பட்டதோ? இன்னும் இயேசு எவ்விதப் போதனைகளை அவர்களுக்கு உபதேசித்துவந்தாரோ? அவைகளையெல்லாம் அடித்துடைத்து ஒரு நூதன சித்தாந்தத்தை உண்டுபண்ணினார்.

## அந்த சித்தாந்தமென்ன?

மோசேயிலிருந்து இயேசுவரைப் பின்பற்றிவந்த நியாயப் பிரமாணத்தைத் தேவையற்றதென்றும் அதைப் பின்பற்றி நடப்பதினால் தெய்வகிருபையைப் பெறமுடியாதென்றும் கூறி ஓர்வித தத்துவ ஞானத்தை சிருஷ்டிக்கலானார். "மேலும் நியாயப்பிரமாணம் கோபாக்கினியை உண்டாக்குகிறது; நியாயப் பிரமாணமில்லாவிட்டால் மீறுதலில்லை" (ரோமர் 5-15) "நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால் பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது" (ரோமர் 6. 14) பவுலுடைய இவ்வசனமோ இயேசுவுடைய சொல்லுக்கு முற்றிலும் மாற்றமாயிருக்கிறது. இன்னும் இவருடைய இவ்வார்த்தையோ மனிதருடைய பகுத்தறிவிற்குப் பொருத்தமற்றதாயும் காணப்படுகிறது. ஏனெனில் ஒரு எஜமானுடைய கட்டளைகளைக் கைக்கொண்டு நடந்தால்மட்டும் அவ்வெஜமானின் கிருபையைப் பெறமுடியுமென்றும் வெறும் வாய்ச்சொல்லினால் மாத்திரம் அவ்வெஜமானை ஏமாற்றி கிருபையையும் நன்கொடையையும் பெறமுடியாதென்றும் ஒரு சிறு

பிள்ளையும் அறிந்த விஷயமேயாம். உண்மை இவ்வாறிருக்க நம் பவுலுடைய சொல்லோ இதற்கும் நேர் மாற்றமாயிருக்கிறது. எனவே, இயேசுவுடைய கட்டளைக்கும் செய்கைக்கும் மாறாய் நடக்கவும் மோசேயுடைய பிரமாணத்தை மீறி வேலைகள் செய்யவும் இப்பவுலுக்கு அதிகாரம் கொடுத்தது யார் யென்பதுதான் விளங்கவில்லை. ஆகவே இயேசு உடைய ஜீவிய காலத்தில் பெரும் சத்துருவாய் நின்று, இயேசுவின் மரணத்தின் பின் விசுவாசித்து கற்பனைகளைத் தள்ளிவிட்ட இப்பவுலை, வரவேண்டிய தேற்றரவாளன் எனக் கூறுவது சுத்தந்தவறேயாகும்.

இன்னும் இவரிலிருந்துதான் திரியேகத்தத்துவமும் பாவிகளுக்காக சிலுவையில் மரித்தார் என்ற கோட்பாடும் ஏற்பட்டதென்பதை பைபிலை வாசித்தவர்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள். எனவே, இயேசுவுக்குப் பின் தெளிவான அடையாளங்களுடனும் சகல தத்துவங்களுடனும் பரிசுத்த ஆவியுடனும் வந்தவர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களே யன்றி வேறுயாருமில்லை.

## இறைவனுடைய நீதிமுறை.

சகோதரர்களே! சற்று நோட்டமிட்டுப் பார்ப்பீர்களாக. மெய்யையும் பொய்யையும் நல்லதையும் கெட்டதையும் பிரித்தறியக்கூடிய ஓர் அபூர்வசக்தியை இம்மனிதனில் அமைக்கப் பட்டிருப்பதினால் தான், இறைவன் வேதங்களைக் கொடுத்தும் தீர்க்கதரிசிகளை இவ்வுலகில் அனுப்பியும் வருகிறான். ஏனெனில் மனிதனுடைய பகுத்தறிவிற்கு இசைந்தவாறே வேதத்தின் கட்டளைகளும், தீர்க்கதரிசிகளின் செயல்களும், ஒற்றுமைப்பட்டிருப்பதால் இம்மனி

தன் சன்மார்க்கத்தில் நடக்கவும் இறைவனுடைய கருணையைப் பெறவும் ஹேதுவாயிருக்கிறது. எனவே, தர்மம் குன்றி அதர்மம் மேலிடும் காலங்களில் அக்காருண்யமூர்த்தியாகிய இறைவன் ஒரு தீர்க்கதரிசியை அனுப்பி அவருக்குத் தன் வார்த்தையை அருளி மனிதர்களை எச்சரித்து நேர்வழியின் பக்கம் திருப்பிவருகிறுன்.

எவர்கள் இத்தீர்க்கதரிசியைப் பின் பற்றுமலும் அவருக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவி (வஹி) யை விசுவாசியாமலுமிருக்கிறுர்களோ அவர்கள் ஒருபோதும் இரக்ஷிப்பைப் பெறமாட்டார்கள். இதைப்பற்றி இயேசு கூறினதாவது, "எவனுகிலும் மனுஷ குமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னுல் அது அவனுக்கு மன்னிக்கப்படும். எவனுகிலும் பரிசுத்த ஆவி (வஹி) க்கு விரோதமாய் பேசினுல் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை" என்றுர். (மத்தேயு 12-32) இதை உண்மைப்படுத்தி பரிசுத்த குர்ஆனிலும் தீர்க்கதரிசிகளையும், இறைவனுடைய பரிசுத்த வார்த்தையையும், விசுவாசியாதவனைப் பாவியென்றும் காபிரென்றும் கூறப்பட்டிருக்கிறது.

## இரக்ஷிப்பின் வழி எது?

நேயர்களே! ஒரு தீர்க்கதரிசியைப் பின்பற்றி வந்த ஜனங்கள், ஒரு காலத்தில் அத்தீர்க்கதரிசியின் போதனையை விட்டும் பரிசுத்த செய்கைகளை விட்டும் நீங்கிப் பொல்லாப்பான பாவங்களைச் செய்து விடுவதும், அதன் பின் இறைவன் வேறொரு தீர்க்கதரிசியை எழுப்பி அவர்களுக்கு எச்சரித்து சன்மார்க்க வழியின் பக்கம் அழைத்து வருவதும், ஒரு இயற்கை பிரமாணமாயிருந்து வருகிறது.

இப்பிரமாணமோ ஆதாமிலிருந்து இன்றுவரையும் நடந்துக் கொண்டேயிருக்கிறது. எனவே, பின்னால் வரப்பட்ட தீர்க்கதரிசியை எவர் விசுவாசித்து நற்கருமங்களைச் செய்கிறாரோ அவரே தான் ரக்ஷிப்பைப்பெறுகிறார்.

உதாரணமாகப்பாருங்கள்; யூதர்கள் எத்தனையோ தீர்க்கதரிசிகளை விசுவாசித்திருந்தும் பின்னால் அனுப்பப்பட்ட இயேசுவை விசுவாசியாதபடியால் அவர்கள் ரக்ஷிப்பைப் பெறவில்லை. இவ்விதமே இயேசுவுக்குப் பின் இறைவனால் அனுப்பப்பட்ட பரிசுத்த முஹம்மது நபி (ஸல்) அவர்களை எவர்கள் விசுவாசித்து நற்கருமங்களைச் செய்யவில்லையோ, அவர்களும் ஒருபோதும் இரக்ஷிப்புப் பெறமாட்டார்கள். ஆகவே உண்மையான இரக்ஷிப்பின் வழி இதுவே யன்றி வேறொன்றுமில்லை. இவ்விரக்ஷிப்புக்காக ஒரு தீர்க்கதரிசியை சிலுவையில் அறைந்துபலியிடவும் தேவைப்படாது. பாவிகளுக்காக ஒருவர் தன்னை தற்கொலை செய்துகொள்ளவும் அவசியப்படாது.

## முஹம்மத்நபி (ஸல்) அவர்கள் இயேசுவையும் மரியாளையும் மகிமைப்படுத்தல்.

நண்பர்களே! இயேசுவுக்குப்பின் உலகரக்ஷகர்முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் பிரசன்னமானபோது, உலகம் பெரும் பாவத்தில் மூழ்கிக்கிடந்தது. யூதர்கள் ஒரு பக்கம் இயேசுவைத் தப்பாய்ப் பிறந்தவரென்றும், பொய்த் தீர்க்கதரிசி என்றும் இதனால் அவரைச்சிலுவையில் அறைந்துகொன்று விட்டோமென்றும், மரியாளை சோரஞ்செய்த ஒரு கெட்ட பெண்ணென்றுஞ்சொல்லி அவ்விருவர்களையும் அவசங்கைப் படுத்திவந்தனர். மறுபக்கத்தில் கிறிஸ்தவர்கள் யூதஜாதிக்

காக அனுப்பப்பட்ட இயேசுவைப் பிடித்துக்கொண்டு இவர் தான் உலக இரக்ஷகரென்றும், பாவிகளை இரக்ஷிப்பதற்காக சிலுவையில் அறைபட்டுத் தன் உயிரைத்துறந்தாரென்றும், கூறுவதுடனில்லாது இயேசுவையும், மரியாளையும், கடவுளுடைய பங்காளிகளாகச் செய்து பூஜித்தும் வந்தனர். எனவே, இந்த இருகோஷ்டிகள் செய்துவந்த பொல்லாப்போ, வானத்தின்கீழ் பெரும்பாவமாய்ச் சமைந்தன. ஆகவே, இவர்கட்கிடையில் சரியான தீர்ப்பைப்புரிந்து, இயேசுவுடைய உண்மை நிலையை உலகத்தாருக்கு பஹிரங்கப்படுத்தும்படி, இறைவன் முஹம்மத்நபி(ஸல்)அவர்கட்கு கட்டளையிட்டான். அதன்படியே உலகஇரக்ஷகர் யூதர்களுக்கு இயேசுவை உண்மையான தீர்க்கதரிசி என்றும், இறைவனால் அபிஷேகம் செய்யப்பட்ட பரிசுத்தவாழரென்றும், கூறி, அவரை மகிமைப்படுத்தினார். இவ்வாறே, மரியாளையும் பரிசுத்தமுள்ள ஒரு நல்ல பெண்ணென்றும், இறைவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றவளென்றும், சாக்ஷி பகர்ந்தார். மேலும் அவர் கிறிஸ்தவர்களுக்கு உரைத்ததாவது:— இயேசு இறைவனுடைய திருத்தூதராயும், இஸ்ரவேலர்களுக்கு ஒரு தீர்க்கதரிசியாயுமிருந்தார் என்றும், அவர் சிலுவையில் மரிக்கவில்லையென்றும், அவர் கடவுளுமல்ல, கடவுளின் குமாரனுமல்ல, யென்றும் தீர்ப்பளித்து இயேசுவின்பேரில் சுமத்தப்பட்ட சகல ஆட்சேபங்களையும் நிவர்த்திசெய்து அவரைச்சுத்தப்படுத்தி சாட்சி பகர்ந்தார். இதனால்தான் இயேசு கூறினதாவது:— அந்த தேற்றரவாளன் வரும்போது என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார் என்றும் அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவாரென்றும் தீர்க்கதரிசனமுரைத்தார்.

## கிறிஸ்தவப் போதகர்களின் விளங்காத்தன்மை.

இவ்விதம் இறைவன் உலக இரக்ஷகர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களைக்கொண்டு இயேசுவையும், மரியாளையும், மகிமைப்படுத்திக் கூறின வார்த்தைகள் குர்ஆனில் பல இடங்களிலும் காணலாம். ஆனால் நகைக்கத்தக்க விஷயமாவது, எதற்காக இவ்விதம் கூறப்பட்டுள்ளதென்பதை அறியாத சில கிறிஸ்தவப்போதகர்கள் மருண்டு, தங்களுக்கு ஆதாரமாக குர்ஆனிலுள்ள சில வசனங்களை எடுத்துக் காட்டிப் பார்த்தீர்களா? முஸ்லீம்களே! எங்கள் இயேசுவைப்பற்றியும், மரியாளைப்பற்றியும், மிகு மேன்மையாய் குர்ஆனில் பேசப்பட்டிருக்கிறது. இவ்விதம் ஒரு தீர்க்கத்தரிசிகளுக்காவது குர்ஆனில் பேசப்படவில்லை; ஆகையால் உங்கள் முஹம்மது நபியைப் பார்க்க இயேசுநாதர் மேலானவர் என்று கூறிவருகிறார்கள்,

கிறிஸ்தவ சகோதரர்களே! உங்கள் இருதயத்தை இறைவன் திறப்பானாக. எவ்விதம் உங்கள் இயேசுவைப் பற்றிக் குர்ஆனில் மேன்மையாய்ப் பேசப்பட்டிருக்கிறதோ அதே வித வார்த்தைகளைக் கொண்டு ஒவ்வொரு பரிசுத்தவான்களுக்கும் பேசப்பட்டிருப்பதை குர்ஆனில் காணலாம். அதிற் சிலதாவது "சொல்லும் உம்முடைய இறைவனில் நின்றும் ரூஹுல் குதூஸை (பரிசுத்த ஆவி) உண்மையுடன் இறக்கி விசுவாசிகளுக்கு உறுதியையும் முஸ்லீம்களுக்கு நேர்வழியையும் நன்மாராயத்தையும் கொடுக்கிறான்." (சூறா 16-13)

இங்கு இவ்வசனப்படி ஒவ்வொரு உண்மை விசுவாசிகளுக்கும் பரிசுத்த ஆவியை கொடுக்கப்படுமென்று இறைவன் கூறியுள்ளான். இவ்வித பரிசுத்த ஆவியைத் தான்

இயேசுவுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் தன் அடியார்களில் தான் நாடியவர்களுக்கும் தன் ரூஹை கொடுக்கிறான்; என்றும் பின்பு அவனை செம்மைப்படுத்தி தன்னுடை ரூஹை (ஆவியை) ஊதினான் என்னும் கூறப்பட்டிருக்கிறது. (சூரா 32 ரு. 1, ரு. 15. ரு. 3.) இன்னும் அநேகமுண்டு. எனவே, இயேசு மற்றும் தீர்க்கதரிசிகளைப் போன்றவரே யல்லாது வேறல்ல. ஒரு தீர்க்கதரிசிக்கு என்ன லக்ஷணமிருக்க வேண்டுமோ அதெல்லாம் அவரிலிருந்தது. இன்னும் பைபிலில் இயேசுவை தேவ குமாரன் என்று பேசப்பட்டிருப்பதால் இவருக்கு மற்ற தீர்க்கதரிசிகளைப் பார்க்க விசேஷமிருக்கிறதென்று கிறிஸ்தவர்கள் கூறிவருகின்றனர். நாம் பைபிலை பார்க்கும்போது எத்தனையோ பேர்களுக்கு தேவகுமாரர் என்று கூறியிருப்பதை வாசித்து வருகிறோம். அதாவது "அப்பொழுது நீ பார்வோனோடே சொல்ல வேண்டியது என்னவென்றால் இஸ்ரவேல் என்னுடைய குமாரன் என் ஜேஷ்ட புத்திரன்' (யாத்திரகாம் 4, 22) இன்னும் தேவனுடைய குமாரன் என்றுசொல்லும் விழுப்பந்தானென்ன; வென்பதை இயேசு தாமே நல்ல வியாக்கியானம் செய்திருப்பதைப் பாருங்கள். "தேவ வசனத்தைப் பெற்றுக்கொண்டவர்களை தேவர்கள் என்று அவர் சொல்லி யிருக்க வேத வாக்கியமும் தவறாததாயிருக்க பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டும் உலகத்தில் அனுப்பப்பட்டும் இருக்கிற நான் என்னைதேவனுடையகுமாரன் யென்று சொன்னதினாலே தேவ தூஷணம் சொன்னாய் யென்று நீங்கள் சொல்லலாமா?" (யோவான் 35-36) இதில் இயேசுவுடைய இவ்வார்த்தைப்படி தேவ வசனத்தைப் (வஹியை) பெற்றுக்கொண்டவர்களை தேவர்கள் என்றும், தேவகுமாரன் என்றும், உவமையாகச் சொல்லலாமென்று நன்கு விளங்குகிறது. இவ்விதம் பார்த்தால் எங்கள் பரி

சுத்த முஹம்மதுநபி (ஸல்) அவர்களையும் மோசேயையும் கர்த்தராகவும் இயேசுவை கர்த்தருடைய குமாரனாகவும் சொல்லலாம். ஆனால் முஸ்லீம்களாகிய நாங்களோ, கிறிஸ்தவர்கள் சொல்வதுபோல் அப்படிச்சொல்வதில்லை. மேலும் இயேசுவைப்பற்றியும் மரியாளைப்பற்றியும் அதிகம் பேசப்படவேண்டிய காரணமென்னவென்பதை அறிவீர்களாக. இயேசுவுடைய பிறப்பின் பேரிலும், ஜீவிப்பின் பேரிலும், மரணிப்பின்பேரிலும், மனிதர்களுக்கிடையில் பெரும் ஆட்சேபங்கள் உண்டாய்விட்டபடியால் அதையெல்லாம் நிவர்த்திசெய்து, அவரை ஒரு தீர்க்கதரிசி என்று உறுதிப்படுத்தவேண்டிய பொறுப்பு இறைவன்பேரிலிருந்தது. இதனாலேயே குர்ஆனில் அனேக இடங்களில் மரியாளுடையவும் இயேசுவுடையவும் சரித்திரத்தைப்பற்றிப் பேசப்பட்டிருக்கிறது. இதனால் இயேசு பெரியவராகிவிடமாட்டார். இவரை சகல ஆட்சேபங்களை விட்டும் துப்பரவு செய்ய வந்த பரிசுத்த முஹம்மதுநபி (ஸல்) அவர்களே பெரியவராயிருக்கிறார். மேலும் எல்லாத் தீர்க்கதரிசிமார்களும் ஒரு கடவுளிடமிருந்து வந்தவர்களானபடியால், அவர்கள் ஒரு பிதாவுக்குப் பிறந்த சகோதரர்கள்போல் இருக்கிறார்கள். எனவே, அச்சகோதரர்களில் ஒருவரை உலகம் நிந்திக்குமாயின் பின் வந்த மற்ற சகோதரர் அந்நிந்தனையை விட்டும் அவரை யகற்றவேண்டுமென்ற பொறுப்பை இறைவன் தன் தீர்க்கதரிசிகளுக்குச் சாட்டியிருக்கிறான். இன்னும் குர்ஆனில் முஹம்மதுநபி (ஸல்) அவர்களை உலகத்தாருக்கு ஓர் அனுக்கிரகமாக அனுப்பியிருப்பதாயும் தீர்க்கதரிசிகளுக்கு முத்திரை யடித்து அனுப்புகிற தலைவராயும், மனிதர்களை துப்பரவு செய்யக்கூடிய வல்லவராயும், பேசப்பட்டிருக்கிறது.

மேலும் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் உரைத்ததாவது "மோசேயும் இயேசுவும் என் காலத்தில் ஜீவித்திருப்பார்களாயின் அவர்கள் என்னைப்பின்பற்றி என்னுடைய சீஷர்களாகவே இருப்பார்கள்" என்றும் கூறியுள்ளார்கள்.

ஆகவே இயேசுவுக்குப்பின் பாரான் மலையிலிருந்து அவதரித்த உல இரக்ஷகர் முஹம்மது முஸ்தபா (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களை விசுவாசித்து இரக்ஷிப்பைப் பெறுவீர்களாக. ஆமீன்.

மீரானியா பிரஸ், திருநெல்வேலி 6—30.

6B
9-215